மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் சேர்ந்து, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கோரிக்கை மனுவைக் கொடுக்கும்பட்சத்தில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் மூலமாக கொப்பரை கொள்முதல் செய்வதற்கான சாத்தியகூறுகள் குறித்து ஆராயப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்தில் பரிசிலனை செய்யப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 127, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

127—

**மாற்று மலைப்பாதை அமைத்தல்**

***50715—திரு. மு. அருண் சுப்பிரமணியன்:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணியிலுள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு மேற்குப் பகுதியில் மாற்று மலைப்பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 ஆகஸ்ட் 25]

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்குகின்ற தெய்வம், என்னை வாழ வைக்கும் தெய்வம், எங்கள் குல தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, என்னுடைய விடையை அளிக்கின்றேன்.*

*(அ) மற்றும் (ஆ) திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு மேற்குப் பகுதியில் மாற்று மலைப்பாதை அமைக்கும் பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.*

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்த நான்காண்டு ஆட்சியை நாடு போற்றுதும், நல்லோர் வாழ்த்துதும், இந்தியத் திருநாட்டில் தமிழகமே தலையாய மாநிலம் எனத் தலைநிமிர்ந்து தரணி வியக்கும் சாதனைகளைச் செய்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, நீங்கள் கடந்த நான்காண்டு ஆட்சியில் தேசத்தின் விருதுகள் தமிழகம் தேடி வர நல்லாட்சி செய்தீர்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) பட்டா, சிட்டா, சான்றிதழ்கள், முதியோர் ஓய்வூதியம் முதலானவற்றை பாமரன், ஏழைகள் வசிப்பிடத்தையே தேடி வந்து கிடைப்பதற்கு 'அம்மா திட்டம்' தந்தவர் அம்மா நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா நீங்கள் கடந்த நான்காண்டு ஆட்சியில் வறுமை போக்கும் திட்டம் தந்து, கல்லாமை, இல்லாமை, வேலையில்லாமை, இயலாமை அனைத்தையும் இல்லாதுமாய்த்து, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டுள்ளீர்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, நீங்கள் அச்சமறியா அரிமா, அகிலம் போற்றும் ஆற்றல் அரசை ஆக்கிக் காட்டுபவர், இருவிரலை ஈட்டியாக்கி எதிரிகளை விரட்டிக் காட்டுபவர் அம்மா நீங்கள். அம்மா நீங்கள் அறிவிலும், ஆங்கிலப் புலமையிலும் இன்னொரு அண்ணா.*

[2015 ஆகஸ்ட் 25

*முற்பகல் 10–35*

*அம்மா! நீங்கள் அரசியல் வரலாற்றில், ஆர்.கே. நகர் தொகுதி தேர்தலில் ஒரு மணி நேரம் பிரச்சாரம் செய்து ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றி பெற்று கின்னஸ் சாதனை படைத்தவர் அம்மா நீங்கள்! அம்மா, நீங்கள் தெய்வ நம்பிக்கையும், தன்னம்பிக்கையும் கொண்டு, இன்ப துன்பங்களை ஏற்று இரண்டிலும் இடறிவிடாமல் இருப்பவர்தான் அம்மா நீங்கள்! வெற்றியை வசப்படுத்த நினைப்பவர்கள் உங்கள் வாழ்க்கை வரலாற்றைப் படித்தாலே போதும் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, வருகின்ற காலங்களில் நீங்கள்தான் தமிழகத்தை ஆளப்போகிறீர்கள் இது சத்தியம், இது சத்தியம். வங்கக் கடல்மீது உறங்குகின்ற வள்ளல்மீது ஆணையாக, அவரின் வலப்புறத்தில் துயில்கொள்ளும் அண்ணாமீது ஆணையாக, தமிழ்பூமி மீது ஆணையாக, சங்கத் தமிழ்மீது ஆணையாக நான் அறுதியிட்டுக் கூறுகின்றேன், வருகின்ற தேர்தலிலும் வெற்றி பெற்று தமிழகத்தை ஆளப்போகும் முதல்வர் நீங்கள்தான் அம்மா, அம்மா என்று கூறிக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி மலை, மேற்குப் பகுதியில் மாற்றுவழிச் சாலை ஏற்படுத்தப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், ஆணையிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மாற்றுவழி மலைப்பாதை மிகவும் அவசியமான, மக்களின் 50 ஆண்டுகால கோரிக்கையாகும். எனவே, போர்க்கால நடவடிக்கையாக அந்தப் பாதை அமைக்க இந்த ஆண்டிலேயே நிதி ஒதுக்கீடு செய்து நிறைவேற்ற ஆவன செய்யுமாறு தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 ஆண்டுகால கோரிக்கையாக இருந்தாலும், 100 ஆண்டுகால கோரிக்கையாக இருந்தாலும் கோரிக்கைளை நிறைவேற்றுகின்ற ஒரே தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை முதலில் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2015 ஆகஸ்ட் 25]

*திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயில் மேற்கு கோபுரம் வழியாக மாற்று வழி மலைப்பாதை அமைப்பதற்கு வனத் துறை நிலங்கள் மற்றும் தனியார் நிலங்கள் தேவைப்படுகின்றன. தனியார் நிலங்களைக் கையகப்படுத்த திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வனத் துறை நிலத்தைப் பெறவேண்டுமெனில் நில மாறுதல் அடிப்படையில் அதற்கு ஈடாக இரண்டு மடங்கு நிலத்தை வனத் துறைக்கு வழங்க வேண்டுமென்பது விதியாகும். இந்நேர்வில் திருச்செந்தூர் வட்டம், தேரி குடியிருப்பு, கற்குவேல் அய்யனார் கோயிலுக்குச் சொந்தமான குதிரைமொழி கிராமம், புல எண் 141-ல் 5.92 ஹெக்டேர் நிலத்தினை வனத் துறைக்கு விற்பனை செய்ய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி நிலம் தொடர்பான வழக்கு ஒன்று மதுரை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால், இவ்வழக்கு முடிந்தவுடன் நிலம் கையகப்படுத்தும் பணியினைத் துரிதப்படுத்தி, திருத்தணி திருக்கோயிலுக்கு மாற்றுவழி மலைப்பாதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) அமைக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

128—

## சிமென்ட் ஆலை

***56155 திரு. மு.வீ. கருப்பையா:**

*மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சோழவந்தான் தொகுதியில் சிமென்ட் ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS